குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 160/2022

அ.சா. **13**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. நாகரத்தினம் |
| தகப்பனார் /பெயர் | : | திரு.கோபால் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 37 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 14.05.2024**

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

நான் தற்போது ஓசூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமைக்காவலாக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2019-ம் வருடம் பாகலூர் காவல் நிலையத்தில் பணிபுரிட்நதபொழுது 14.02.2019-ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் அவர்களின் உத்தரப்படி ஓசூர் எஸ்.எஸ்.கவுடா என்ற மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த திரு.ஹரீஷ்குமார்(26), என்பவரிடம் வாக்குமூலம் பெற்று அதனை அவரிடம் படித்துக்காண்பித்து கையெழுத்து பெற்று அந்த புகார் வாக்குமூலத்தை காவல் உதவி ஆய்வாளரிடம் சமர்ப்பித்தேன். அந்த புகார் வாக்குமூலத்தின் பேரில் பாகலுர் காவல் நிலையை குற்ற எண்.28/2019, இ.த.ச.பிரிவில் 287 மற்றும் 338 -ன் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. **(**மேற்படி புகார் வாக்குமூலமானது அ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**)** அதன் பின்னர் சேலம் மோகன்குமாரமங்களம் அரசு மருததுவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த ஹரீஷ்குமார் சிகிச்சை

பலனின்றி **18.02.2019-**ம் தேதி இறந்துவிட்டார். ஆகையால் வழக்கின் சட்டப்பிரிவு 338 -ல் இருந்து இ.த.ச.பிரிவு 287, 304 A ன் கீழ் வழக்கு மாற்றம் செய்யப்பட்டது. 19.02.2019 ம் தேதி அவருடைய பிரேதமானது காலை 11.10 மணிக்கு பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது. மேற்படி பிதேதத்தை அரசு மருதவரிடம் ஒப்படைத்து பிரேத பரிசோதனைக்கு பிறகு அவருடைய உடலை உறவினர்களிடம் ஒப்படைத்து, நிலையம் வந்து அறிக்கை செய்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வளார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துகொண்டார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

**1)** பிரேத பரிசோதனை நடந்த தினம் அன்று தான் எனது வாக்குமூலத்தனை காவல் ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்து கொண்டார். காவல் ஆய்வாளர் தான் எனது வாக்குமூலத்தினை பதிவு செய்தார். புகார் வாக்குமூலத்தில் இவ்வழக்கு விபத்து சம்பவத்தில் இறந்துபோன திரு.ஹரீஷ் குமார் என்ன படிப்பு படித்திருந்தார் என்ற விவரத்தினை கேட்டு தெரிந்துகொண்டு குறிப்பிடவில்லை. திரு.ஹரீஷ்குமார் பள்ளிப்படிப்பு படித்துள்ள நபர் என்ற காரணதினால் அவரல் கையெழுத்து இடமுடியும் என்றாலும், ஆகவே அவரது வாக்குமூலத்தில் அவரிடம் கையெழுத்துதான் பெற்றிருக்கவேண்டும் என்றாலும், மாறாக அவரது இடது கை பெருவிரல் ரேகை தான் இடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான், விபத்து சம்பவத்தின்போது திரு.ஹரஷ்குமாருக்கு கழுத்தில் அடிப்பட்டிருந்த காரணத்தினால் அவரது உடலில் கழுத்துக்கு கீழ் உள்ள பாகங்கள் செயல் இழந்துவிட்டது, ஆகவே அவரால் கையெழுத்து இட முடியவில்லை., எனவே அவரது கைரேகையை பெற்றுக்கொண்டேன். திரு.ஹரீஷ்குமாருக்கு விபத்து ஏற்பட்டு சிகிச்சையில் இருப்பதாக எஸ்.எஸ்.கவுடா மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு கவல் தெரிவிக்கப்பட்டது, அப்போதைய காவல் உதவி ஆய்வாளர் அவர்களின் உத்தரவின்பேரில் தான் மேற்படி மருத்துவமனைக்கு சென்று திரு.ஹரீஷ்குமாரின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன்.

2) திரு.ஹரீஷ்குமார் விபத்திற்கு பிறகு சுயநினைவை இழந்துவிட்டார் என்றாலும், ஆகவே அவரது உறவினர்களுக்கு அவருடைய உயிர் காப்பீட்டுத்தொகையை பெறுவதற்கு வேண்டி உண்மைக்கு புறம்பான விவரங்களை புகார் வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகால் வாக்குமூலம் பதிவு செய்த சமயத்தில் திரு.ஹரீஷ்குமார் சுயநினைவுடன் தான் இருந்தார் என்று மருத்துவரிடம் சான்று ஏதும் இல்லை, ஆனால் அச்சமயத்தில் அவர் சுயநினைவுடன் தான் இருந்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு
சரியென ஒப்புக்கொண்டார்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றையியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.